செ.வெ. எண் 94 நாள் 28.1.2010

# பத்திரிக்கை செய்தி

## தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திற்கான தலைமைப் பணியிட பணிகளுக்கு பணியாணை வழங்கப்பட்டது.

தமிழகத்தின் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6755 ஊரக குடியிருப்புகளில் உபயோகிக்கப்படும் குடிநீரில் ப்ளோரைடு உப்புகளின் சதவிகிதம் 1 லிட்டர் குடிநீரில், 1.5 மில்லிகிராம் முதல் 12.4 மி.கி. உள்ளதாக, குடிநீர் மாதிரிகளின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனத்தின் கையேட்டின்படி வரையறுக்கப்பட்ட ப்ளோரைடு அளவாக 1 லிட்டர் குடிநீருக்கு 1.5 மி.கி. மட்டுமே உள்ளது. எனவே, பல ஆண்டுகாலமாக இந்த இரண்டு மாவட்டங்களில் ப்ளோரைடு கலந்த குடிநீரில் பருகிவருவதால், இம்மாவட்டங்களில் உள்ள மக்கள் மூட்டு, முதுகெலும்பு, கைகால் வளைதல், முடக்குவாதம் போன்ற நோய்களினாலும், பற்கள் காவியாதல் மற்றும் எலும்பு தொடர்பில்லாத பல்வேறு நோய்களினாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும், இரண்டு மாவட்டங்களும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாகும். எனவே, கோடைக்காலங்களில் இந்த மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு பெருமளவில் ஏற்படுகிறது. எனவே, ப்ளோரோசிஸ் பாதிப்பிலிருந்து தடுக்கும் வகையிலும், நிலையான மற்றும் நீடித்த குடிநீர் இப்பகுதி மக்களுக்கு வழங்கும் வகையிலும், 1928 கோடியே 80 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை செயல்படுத்திட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இவ்விரு மாவட்டங்களிலுள்ள சுமார் 30 லட்சம் மக்கள் பயன்பெறுவர். இத்திட்டத்தினை செவ்வனே செயல்படுத்திடும் வகையில் 5 கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

கட்டம் ஒன்றில் நீர் உள்வாங்கும் கட்டமைப்பு, இயல்பு நீர் உந்து அறை, இயல்புநீர் இறைப்பான், இயல்பு நீர் உந்துக்குழாய், நாளொன்றுக்கு 156 மில்லியன் லிட்டர் திறனுடைய நீர் சுத்திகரிப்பு நிலையம், சுத்திகரிக்கப்பட்ட நீர் கடத்தும் குழாய், நீர் உந்து நிலையம், 240 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி, மின்னணு தகவல் பரிமாற்றம் மற்றும் குறிப்பு சேகரித்தல் போன்ற பணிகளை உள்ளடக்கியதாக உள்ளது.

முன்தகுதிக்கான தேர்வு, தொழில்நுட்பம் மற்றும் நிதி தொடர்பான மதிப்பாய்வு முடிந்து கட்டம் ஒன்றுக்கான பணி உத்தரவு ரூபாய் 237 கோடியே 18 லட்சத்திற்கு ஐ.வி.ஆர்.சி.எல். இன்ப்ராஸ்ட்ரக்சர் என்ற ஹைதராபாத் நிறுவனத்திற்கு 28.1.2010 அன்று வழங்கப்பட்டது.

இப்பணிகள், நிறுவனத்தால் விரைவில் துவங்கப்படவுள்ளன.

வெளியீடு, இயக்குநர், செ.ம.தொ.துறை, சென்னை 9.